திரு. எல். கணேசன் : தலைவர் அவர்களே, பூம்புகார் நகரம் இலக்கியச் சிறப்புப் பெற்றிருக்கிறது என்பதை அறிந்து இப்பொழுது பயணிகள் அதிக மாக அங்கே வருகிறார்கள். அரசும் கிட்டதட்ட 3.5 லட்சம் ரூபாய் செலவில் ஒரு கலைக்கூடம் கட்டி வருகிறது. இனிமேலாவது, அந்த இடத்திற்கு அரசாங்க பஸ் விடும் உத்தேசம் அரசுக்குண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாயவரத்திலிருந்து பூம்புகாருக்கு உள்ள தூரம் 21 கிலோ மீட்டர்கள்தான். பூம்புகாருக்கு இருக்கும் சாலை போக்குவரத்துக்கு அவ்வளவு வசதியாக இருக்கவில்லை. ஆகவே, தற்போது எக்ஸ்பிரஸ் பஸ் விட செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பூம்புகாரின் சிறப்பை நிலை நாட்ட அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே, ரெகுலர் பஸ் விடுவதற்கு இப்பொழுது வசதிப்படாவிட்டாலும், மாமல்லபுரத்திற்கு ஸ்பெஷல் பஸ் விடுவதுபோல், பூம்புகாருக்கும் அத்தகைய பேருந்து விடுவதற்கு முயற்சி செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினருடைய கருத்து ஏற்கப்பட்டு, பரிசிலிக்கப்படும்.

Malur—Hosur Railway line

* 403 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) Whether this Government has recommended to the Southern Railway authorities at Madras, to extend the Broad-gauge Railway line from Malur Railway Station on Madras—Bangalore Broad guage Railway line to Hosur on the Salem—Bangalore Railway line; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) & (இ) சேலம் மாவட்டத்திலுள்ள ஹோசூரிலிருந்து மைசூர் மாநிலத்தின் கோலார் மாவட்டத்திலுள்ள மாலூர் வரையில் இருப்புப்பாதை அமைப்பதை நான்காவது திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படி மாநில அரசு பரிந்துரைத்துள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Salem-Bangalore meter gauge line and the Madras-Bangalore broad gauge line run parallel to each other and do not meet. Somewhere they should be connected to increase the profit of the Salem–Bangalore railway. The best place for that is Hosur, because the distance between them is only twenty miles. This link has a vast hinterland. The Rayalaseem district; The Kalan district; The East South Bangalore district with the Rayalaseema districts, will have access to the Salem-Bangalore railway. Out of these twenty miles, nine miles lie in Mysore State and eleven miles lie in Tamil Nadu State. I have sent a memorandum to the Mysore Government and they are considering it. May I request the Hon. Minister to take necessary steps in the matter?

The HON. THIRU S. J. SADIQ PASHA : We have already taken necessary steps in the matter.

திரு. வி. எஸ். எஸ். மணி: சார், வேறு எந்தெந்த வேலைகள் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றன? திண்டுக்கல்-கூடலூர் இரயில் பாதை சர்வே செய்யப்பட்டும், வேலை நடக்கவில்லை. இப்பொழுது அதைப் பற்றி பரிந்துரை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கனம் உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால், பதில் அளிக்கலாம்.

ஆஸ்டின்பட்டிக்கு உபபாதை

*404 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆஸ்டின்பட்டியிலுள்ள காசநோய் மருத்துவ மனைக்கு கணக்கன்குளத்துக்குத் தெற்கே மதுரை—திருமங்கலம் சாலையில் புதிதாக உபாதை (by pass) போடுவதற்கான செலவு எவ்வளவு?

(இ) அந்தப் பாதை இப்போது போக்குவரத்துக்குப் பயன்படுத்தப் படுகிறதா?

(உ) இல்லையென்றால் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ. ஜே. சாதிக் பாட்சா: (அ) ரூபாய் 1,07,069.

(இ) மேற்படி பாதையின் குறுக்கே உயர் அழுத்த மின் விசைக் கம்பிகள், 5 அடி முதல் 16 அடி உயரத்தில் செல்வதால் நிறைந்த பளுவுடைய லாரிகள் தவிர மற்ற எல்லா லாரிகளும் செல்கின்றன.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். அக்னிராஜு: தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆஸ்டின்பட்டியிலுள்ள மருத்துவமனைக்கு வழித்தடம் இருக்கிறது. தற்சமயம் கேட்கக் கூடிய இந்தப்பாதை, அவசியமான திட்டமாக இருக்கிறது. மின்சாரக் கம்பிகள் இருக்கிறது என்று ஏற்கனவே தெரிந்திருந்தும் இந்தப் பாதை அமைக்கப் பட்டிருக்கிறது. அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மின் கம்பிகள் தரை மட்டத்திலிருந்து 20 அடி உயர்த்துவது பற்றி மாநில மின்சாரக் குழுவின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

Tiruthani-Podaturpet road

*405 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal with the Highways Department to form and reconstruct the road between Tiruthani and Podaturpet (via) Ramasamudram and Keechalam?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இல்லை.